TNTL0D0000092022

# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்

முன்னிலை : **திரு.ப.பிரவீன் ஜீவா,** பி.ஏ.,பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
(முழு கூடுதல் பொறுப்பு)
அம்பாசமுத்திரம்.

2026 ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 09–ம் நாள், வியாழக்கிழமை

**இ.ம.எண். 3/2025**
**உள்**
**அசல் வழக்கு எண். 10/2022**

(CNR. No.TNTL0D-000009-2022)

அம்பாசமுத்திரம் தாலுகா, இடைகால் கிராமம், சரகம், பனையங்குறிச்சி ராமசாமி கோவில் தெரு, கதவு எண்.73 மற்றும் 72 ன் கீழ் ஓரம் இருந்து வரும் அருணகிரி நாடார் குமாரர், வயது 57 உள்ள பார்த்தீபன்.

... மனுதாரர் / வாதி

/ **எதிர்** /

தென்காசி தாலுகா, தென்காசி மேலகரம், எழில் நகர், கதவு எண்.10 இ என்ற முகவரியில் இருந்து வரும் அருணகிரி நாடார் குமாரர், வயது 64 உள்ள நாகராஜன்.

... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 10 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 05.11.2025

மனுவிற்கான முத்திரைக் கட்டணம் : ரூ.20/–

இம்மனுவானது கடந்த 10.06.2026–ஆம் தேதியன்று என்முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.வா.வயிரவிநாயகன்**, பி.எஸ்ஸி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு.கே.செல்வராஜ்**, பி.எஸ்ஸி.,பி.எல்., மற்றும் **கே.எஸ்.ஜெகன்ஸ்ரீநாத்**, பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவாணை

1. இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு ஆணையிடப்படுகிறது.

2. செலவுத்தொகை இல்லை என்று உத்தரவிடப்படுகிறது.

   (இருதரப்பிலும் செலவு விவரப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

## தபசில்

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சேரன்மகாதேவி பதிவு மாவட்டம், முக்கூடல் சார்பதிவாளர் சரகம், இடைகால் கிராமம்–2 சரகம், பனையன்குறிச்சி பிளாக் 7ல் ராமசாமி கோவில் தெருவில் முன் நத்தம் சர்வே எண்.856/1 தற்போது நத்தம் சர்வே எண்.963/4 நம்பரில் உள் மனைக்கு எல்கை – கதவு எண்.72 வீட்டு பொதுச்சுவருக்கு கிழக்கு, வாதியின் நடபாதை மனைக்கு மேற்கு, வடக்கு தெருவுக்கு தெற்கு, வாதியின் வீட்டின் இதர பகுதிக்கு வடக்கு, இதற்குள்பட்ட கிழமேல் 6 அடி தென்வடல் 32 அடி உள்ள மனையும், அதில் வாதி அமைத்துள்ள கடை மற்றும் மாட்டுதொழு ஆஸ்பெஸ்டாஸ் சீட் கட்டிடமும் கதவு எண்.73ன் பகுதியும். தபசில் விவரம் சரி.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

PRAVEENJEEVA P

Uploaded on 25.08.2026
Digitally signed by PRAVEENJEEVA P
Date: 2026.08.25 16:11:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.